# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் – 02.07.2025**

**முன்னிலை**

**திரு முகம்மது ஷகீல் அ்ஃதர், இகாப (ஓய்வு)**

**மாநில தலைமை தகவல் ஆணையர்**

*****

## வழக்கு எண். CP 4604/SCIC/2022

Thirumathi REMA DEVI — மனுதாரர்
No.45, 1st Block Swathi Tejas
Padmini Garden Street
Nandambakkam, Chennai-600 089.

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
துணைப் பதிவுத்துறைத் தலைவர்
துணைப் பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம் .... பொது அதிகார அமைப்பு
கோயம்புத்தூர்

**ஆணை**

1.இப்புகார் மனுவானது ஏற்கனவே 30/12/2024 தேதியன்று ஆணையத்தால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, கீழ்க்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

> ***03/11/2022 தேதியிட்ட தகவல்கள் அடங்கிய கடிதத்தினை மனுதாரருக்கு அனுப்பியதற்கான அஞ்சல் ஆதாரம் ஏதும் பொதுத் தகவல் அலுவலரால் விசாரணையின்போது சமர்ப்பிக்க இயலவில்லை. எனவே, இப்பொருள் குறித்து திரு.க.ராஜா, மாவட்டப் பதிவாளர், கோயம்புத்தூர் (தெற்கு), அவர்கள் ஒரு மாத காலத்திற்குள் விசாரணை மேற்கொண்டு, அதுகுறித்த அறிக்கையினை 19/02/2025 அன்று ஆணையத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். 03.11.2022 தேதியிட்ட கடிதத்தில் இணைப்புகள் இன்றி மனுதாரருக்கு தகவல்கள் அனுப்பிய அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு.தன்ராஜ், சார்பதிவாளர் அலுவலகம், ஆனைமலை அவர்கள்***

*மீது சட்டப்பிரிவுகள் 20(1) மற்றும் 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை மேற்கொள்ளக் கூடாது என்பதற்கான அவரது விளக்கத்தினை 15 தினங்களுக்குள் சமர்ப்பிக்குமாறும் தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் மேற்படி அலுவலரிடமிருந்து அவ்விளக்கத்தினைப் பெற்று 19/02/2025 அன்று ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டும்.*

2. மேற்குறிப்பிடப்பட்ட ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க 19/02/2025 அன்று பொதுத் தகவல் அலுவலர் சார்பில் திரு.ம.ராம், இளநிலை உதவியாளர், சார்பதிவாளர் அலுவலகம், ஆனைமலை நேரில் ஆஜராகி, திரு.க.இராஜா, மாவட்டப் பதிவாளர், கோயம்புத்தூர் அவர்களின் 15/02/2025 தேதியிட்ட அறிக்கையினையும், முன்னாள் பொதுத் தகவல் அலுவலர் திரு.M.P.தன்ராஜ் தற்போது சார்பதிவாளர், பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம் (பகராண்மை) சென்னை அவர்களிடமிருந்து பெற்ற காரண விளக்கம் ஆகியவற்றை ஆணையத்தின் முன்பு சமர்ப்பித்தார்.

3. மேற்குறிப்பிட்ட முன்னாள் பொதுத் தகவல் அலுவலர் திரு.M.P. தன்ராஜ் தற்போது சார்பதிவாளர், பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம் (பகராண்மை) சென்னை அவர்களிடமிருந்து பெற்ற காரண விளக்கங்களை பரிசீலனை செய்ததில், அது ஏற்கத்தக்கதல்ல என்று ஆணையம் முடிவு செய்கிறது. எனவே 03/11/2022 தேதியிட்ட கடிதத்தில் இணைப்புகள் இன்றி மனுதாரருக்கு தகவல்கள் அனுப்பிய காரணத்திற்காக முன்னாள் பொதுத் தகவல் அலுவலர் திரு.M.P.தன்ராஜ் என்பவர் மீது கோயம்புத்தூர் துணைப் பதிவுத்துறைத் தலைவர் அவர்கள் துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரத்தினை 12/06/2025 அன்று ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறும் ஆணையத்தால் உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. இத்துடன் இந்தப்புகார் மனு மீதான விசாரணை முற்றாக்கம் செய்யப்படுகிறது.

2. அதனைத் தொடர்ந்து 12/06/2025 அன்று பொதுத் தகவல் அலுவலர்/துணைப் பதிவுத்துறைத் தலைவர், கோயம்புத்தூர் சார்பில் திருமதி.சரோஜா, உதவியாளர், ஈரோடு பதிவு மாவட்டப் பதிவாளர் அலுவலகம் அவர்கள் ஆஜராகி ஆணையம் உத்தரவிட்டிருந்தவாறு திரு.M.P. தன்ராஜ் தற்போது சார்பதிவாளர், பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம் (பகராண்மை) சென்னை அவர்களுக்கு 05/06/2025 தேதியிட்டு வழங்கிய காரணம் கேட்கும் குறிப்பாணையின் நகலினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். எனவே, துணைப் பதிவுத்துறைத் தலைவர், கோயம்புத்தூர் மண்டலம் அவர்கள் காரணம் கேட்கும் குறிப்பாணையின் விளக்கத்தை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று உத்தரவிடுகிறது. மேலும் இது தொடர்பான நடவடிக்கைகளை முடிப்பதோடு, மேற்சொன்னவாறு, அன்னார் மீது எடுத்த நடவடிக்கை குறித்த அறிக்கையினை 02/07/2025 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.

3. அதன் பின்னர் இன்று (02/07/2025) திரு.சு.பிரபாகர், துணைப் பதிவுத்துறைத் தலைவர், கோயம்புத்தூர் மண்டலம் அவர்கள் ஆஜராகி, மேற்குறிப்பிட்ட திரு.M.P. தன்ராஜ் தற்போது சார்பதிவாளர், பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம் (பகராண்மை) சென்னை அவர்கள் மீது தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளின் விதி 17 (A)-ன் கீழ் நடவடிக்கை தொடரப்பட்டிருக்கிறது என்பதற்கான 23/06/2025 தேதியிட்ட தகவலின் நகலை

**ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். எனவே, இந்தப் புகார் மனு மீதான வழக்கின் விசாரணை முற்றாக்கப்படுகிறது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**
**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

## வழக்கு எண். CP 4604/SCIC/2022

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
துணைப் பதிவுத்துறைத் தலைவர்
துணைப் பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்
கோயம்புத்தூர்.

2. திரு.M.P. தன்ராஜ்
தற்போது சார்பதிவாளர்,
பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம் (பகராண்மை)
பட்டினப்பாக்கம், சென்னை

**மேல்முறையீட்டாளர்**

Thirumathi REMA DEVI
No.45, 1st Block Swathi Tejas
Padmini Garden Street
Nandambakkam, Chennai-600 089.

நகல்

1.பதிவுத்துறைத் தலைவர்
பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்
பட்டினப்பாக்கம், சென்னை-28

2.பதிவாளர்
தமிழ்நாடு தகவல் ஆணையம்
சென்னை-600 035

RG/PC